Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத் - சுஉ] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆடிமீ ககஉ வெள்ளிக்கிழமை (27 ஜுலை 1951) [இல.- சஉ]

## பம்பாய் வெங்காயம்

500 தொன்வரை நிறைகொண்ட பம்பாய் வெங்காயம், கொழும்பு துறைமுகத்தில் இப்போது இறக்குமதி செய்யப்படலாயிற்று; இன்னுஞ் சிலகாலிற் பம்பாயிலிருந்து கொழும்புக்கு வேறும் வெங்காயம் வருமாம்.

# நாம் ஏன் பிறந்தோம்?

I

ப. கணபதிப்பிள்ளை ஆசிரியமாணவன்,
சைவாசிரிய கலாசாலை திருநெல்வேலி

செயல்கள் யாவும் நோக்கமுடையன என்பது அகநூலார் கண்ட முடிபு. இதற்கிணங்க நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கவேண்டும்; எனவே நாம் பிறந்ததற்கும் ஏதோ நோக்கம் உண்டு. அதிலும், நாங்கள் மிருகமாய்—பறவையாய்—மரமாய்ப் பிறவாமல் மனிதராய்ப் பிறந்ததிலும் ஏதோ விசேடநோக்கம் இல்லாமலில்லை. உலகமனும் பிறவிகளெல்லாம் ஒரே வகையில் இராமல் மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, மரங்கள், மனிதர், தேவர் என வகுக்கப்பட்டிருப்பதற்கும் காரணம் உண்டு. ஆனால் இக்காரணங்களை எல்லோரும் அலசிப் பார்ப்பதில்லை. இக்காரணங்களை அறிந்து அதற்கேற்பத் தன் இலட்சியப் பாதையைத் திறப்பவன்தான் உண்மையை உணர்வான்; மகாஞானியாவான்; மானிடன் என்ற பெயருக்கு அருகதையுடையவன்.

"நாம் ஏன் பிறந்தோம்" என்பதை நன்கு அறிந்தாற்றான் எமது இலட்சியங்களை அதற்கிணங்க ஆக்கிக்கொள்ளலாம். நம் வாழ்க்கையில் பலவித இலட்சியங்கள் குறுக்கிடுகின்றன. அவற்றுள் எமக்கு அடிப்படையான இலட்சியம் எதுவாகவேண்டுமென்பதை ஆராய்ந்து அடைக்கவேண்டியது எமது கடன். இடையிட்டுத் தோன்றும் இலட்சியங்கள் பெரும்பாலும் அவ்வப்போது உதவியாகவிருக்கும். ஆகவே அடிப்படையான இலட்சியங்கள் மாறுதிருப்பதற்குச் சிலவேளைகளில் இடையிட்டுத் தோன்றும் இலட்சியங்களை மாற்றலாம். சில சந்தர்ப்பங்களில் சிலர் இடையிட்டுத் தோன்றிய இலட்சியங்களுக்காக அடிப்படையான இலட்சியங்களை மாற்றிவிடுகின்றனர். இது முரண்பாடான பலனையே கொடுக்கும். அதாவது குளிக்கப் போய்ச் சேறுபூசுந் தன்மைபோல் இருக்கும். ஆகவே எமது அடிப்படையான இலட்சியப்பாதை எதுவாக வேண்டும் என்பது கண்டு குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட இலட்சியப்பாதையைக் காட்டுவதுதான் இலக்கியம். இலட்சியத்திலிருந்துதான் இலக்கியம் தோன்றியது. இதிலிருந்து, உண்மை இலட்சியத்தைக் கூறுவதுதான் இலக்கியம் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது. இதனாலேயே திருக்கோவையார் போன்ற நூல்கள் சிறந்த இலக்கிய நூல்களாக மதிப்பிடப்பட்டு வருகின்றன; இவற்றைப் படித்தால் நாம் பிறந்ததின் நோக்கம் எது என்பதை நாமே கண்டுகொள்ளலாம்.

தினை விதைத்தவன் தினையறுப்பான். வினை விதைத்தவன் வினையறுப்பான். இது யாவரும் அறிந்த உண்மை. இதுபோன்று ஆன்மாக்களும் முற்பிறவிகளில் எத்தனைய வினைகளை — கன்மங்களைச் செய்தனவோ அத்தகைய பலனை— அதற்கேற்ற பலனை அப்பிறவியிலோ, அடுத்த பிறவிகளிலோ அனுபவிக்கின்றன. இத்தகைய கன்மங்களை அனுபவித்தற்கு, அதற்கேற்ற பிறவிகளையும் அவ்வப்போது கொள்ளுகின்றன. புண்ணியஞ் செய்த ஆன்மா—நல்வினை செய்த ஆன்மா அதன் பலனாகிய இன்பத்தை—சுகபோகத்தை அனுபவித்தற்காக செல்வனாகவோ தேவனாகவோ பிறக்கின்றது. பாவம் செய்த ஆன்மா—தீவினை செய்த ஆன்மா அதன் பலனாகிய துன்பத்தை அனுபவித்தற்கு வறியவனாகவோ; கூன், குருடு, செவிடு, மூடமாகவோ; விலங்கு: பறவை முதலியனவாகவோ பிறக்கின்றது.

ஒருவன் "றிக்சோ" வண்டியில் உல்லாசமாகச் செல்கிறான். இன்னொருவன் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அவனை வைத்து இழுத்துச் செல்கிறான். ஒரே பிறப்பு; ஒரே நேரம்; ஒருவனுக்கு இன்பம். மற்றவனுக்குத் துன்பம். இரகசியம் என்ன? இந்த ஒரு இரகசியத்தைக் கண்டுபிடித்தாலே ஒருவன் தன் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக்கொள்வான். அதாவது ஆன்மாக்கள் தாம் தாம் செய்து கொண்ட முயற்சிக்கேற்ற பலனை அனுபவிக்கின்றன என்பதாகும். இதனை "தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்" என்றும் "தன்வினை தன்னைச் சுடும்" என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர். இதனையே வள்ளுவப் பெருந்தகையும் "அறத்தாறிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தானிடை" என்று குறட்பாவால கூறியுள்ளார்.

இன்ப துன்பங்களை அதிகமாக அனுபவிப்பதனால் அவற்றில் ஆன்மாக்களுக்கு ஓர் வெறுப்பு உண்டா

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## செவெலியர் I. X. பெரீரு தேகவியோகமானார்

இலங்கை விந்தியரின் பொருட்டு நீடித்தகாலம் மிக்க அபிமானத்தோடு அரசியற் சுதந்திரங்களைப் பெறும்படியுழைத்துவந்த செவெலியர் i. x. பெரீரு சென்ற சனிக்கிழமை காலை தமது 63-ம் வயதில் இவ்வுலக வாழ்வை யொருவினர்; இலங்கை விந்தியர்மீது இவர் காட்டிய அபிமானத்தை யுத்தேசித்து இந்திய அரசினர் இவருக்கு திவான் பகதூர் என்னும் பட்டமளித்துச் சங்மானித்துள்ளனர்.

உ

## தோத்திரம்

மாயாவிகாரி பூபாரமான மாபாவிமூடன் வறிஞோர்க்
கீயாதலோபி நோயாளனை எளியேனுமுய்வ துளதோ
பாயாடைமூடு சமணக்குறும்பர் பகைவாதுவென்ற கனிவாய்ச்
சேயானவற்கோர் தாயாயளித்த திருவாலவாயில் அரனே.

மாயமாகிய (நிலையற்ற) விகாரரூபத்தை யுடையேனும், பூமிக்குப் பாரமாயுள்ள (பயனற்ற) பெரும் பாவியும், மூடனும், வறியவர்க்கு எதும் ஈயாத குணம்பூண்ட உலோபியும், (தீராத) நோய்வாய்ப்பட்டேனுமாகிய அடியேன் ஈடேறுவதற்கு மார்க்கமுண்டோ! பாயாகிய வஸ்திரத்தை உடுத்திக்கொண்ட சமணர்களாகிய துஷ்டர்செய்த சமயத்துரோகமான வாதத்தில் அச்சமணரை வென்ற கொவ்வைக்கனிபோன்ற சிவந்த வாயினையுடைய ஆளுடைய பிள்ளையாரெனும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குத் தாய்போன்று அநுக்கிரகஞ் செய்த திருவாலவாயிற் கோயில் கொண்டருளிய சொக்கலிங்கப் பெருமானே என்பது பொருள்.

மாயாவிகாரி - அழியுமியல்புடைய விகாரமான தேகத்தை யுடையவன்; பூபாரம் - பூமிக்குப்பாரம், இருந்தும் பயன்படாமை; சேயானவர் - ஆளுடைய பிள்ளையார்; அவர் பாராட்டும் அன்பைக் காட்டிலும் தாய்கொண்ட அன்பு அதிகமாதலால் "தாயாயளித்த" என்றார். செயற்கருஞ் செயலைச் செய்த ஆளுடைய பிள்ளையார்க்கு அருள்செய்த தேவரீர் பரிபக்குவமற்ற தமியேனுக்கும் அருள் செய்வீரோ என இறைவனை யிரக்க வாறும். (94)

## பெற்றோர் தினவிழா

சித்தன்கேணிக் கணேசவித்தியாசாலைப் பெற்றோர்தினவிழா சென்ற 21-7-51 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பாராளுமன்றக்கல்விப் பகுதிக் காரியதரிசி திரு க. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் ஷெ பாடசாலை மானேசர் வட்டார வித்தியாதரிசி வடபெரும்பாக வித்தியாதிகாரி முதலியார் ச. குமாரசுவாமி ஆதியோர் சமுகமாயிருந்தனர். அத்தருணம் பெற்றோர் கடமை ஆசிரியர் கடமை என்றவிஷயங்கள் முறையே வட்டார வித்தியாதரிசியாலும் வடபெரும்பாக வித்தியாதிகாரியாலும் பேசப்பட்டன. பின் மாணவர்களின் பேச்சுக்கள் நடித்தல்கள் தேகாப்பியாச விளையாட்டுகளாதியன நடைபெற்றன. -நடிக.

L K.S. LEBBAY BROS
GOLD HOUSE



தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## பாராளு மன்றப் பேச்சுக்கள்

"நாங்கள் அதிகாரத்தோடிருக்கும்வரை, சிங்களத்தை மாத்திரமல்ல, எல்லா மொழிகளையும் நீங்கள் உபயோகிக்கலாம்; நாங்கள் அவற்றை ஆதரிப்போம்; சிங்கள பாஷையை மாத்திரம் அரச பாஷையாக்கவேண்டுமெனச் சிலர் கூறுவது தவறாகும்......"

— மந்திரி ஸேர். ஜோன் கொத்தலாவலை

"பௌத்த சமயத்தை அரசாங்க மயமாக்குதல் பௌத்த தருமத்திற்கு மாறாகும்; எல்லாச் சமயங்களுக்கும் சம உரிமையும் சுதந்திரமும் அளிக்கவேண்டு மென்பதே அத்தனகல்லாப் பிரதிநிதியின் கொள்கையானால் அவருக்கும் எனக்குமிடையே அபிப்பிராய பேதமில்லையெனலாம்; அதுவே என் கொள்கையுமாம்; மதுபானத்தை காட்டிலிருந்து அறவே தவிர்த்தல் பிழையெனபதும், மதுவிலக்கு அபிமானிகளின் நோக்கத்திற்கு அச்செயல் பிரதிகூலமாகும் (?) என்றும் நான் நினைக்கிறேன்;

சுதந்திர ராச்சியப் பொறுப்பை இப்பொழுது பிறரிடம் நான் ஒப்புவிக்க முடியாது; இது பூரணமாகப் பழுக்கவில்லை; இன்னுஞ் சில ஆண்டுகள் சென்றபின் ஒப்பித்தலாகும். ஆனால் எனக்குப் பின் எவர் பிரதமரென்பதை நான் நிச்சயிக்க முடியாது; நாட்டினரே நிச்சயித்தல் வேண்டும்."

— பிரதமர் சேனநாயக.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கரவருஷ ஆடி மீ ௧௧ உ வெள்ளிக்கிழமை


## திருக்கேதீச்சரத் திருப்பணி

"திருக்கேதீச்சரத் திருப்பணி" என்ற மகுட நாமத்துடன், மேற்படி திருப்பணிச் சபைக் கௌரவ காரியதரிசியாகிய திரு. சு. சிவசுப்பிரமணியம் எழுதிய கடிதத்தை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம்; அக்கடிதம் இப் பத்திரிகையின் 6-7-51 கொண்ட தேதியில் வெளிவந்த பத்திராசிரியர் கூற்றையொட்டி யெழுதப்பெற்றதாகும்; திருக்கேதீச்சர வரலாறும், திருப்பணி செய்யவிருக்கும் முறையும், மேற்படி சபைமார் கொண்டுள்ள மேலான நோக்கமுமாகிய இவைகளெல்லாம், குறித்த கடிதத்தில் நன்கெடுத்து விளக்கப்பட்டுள்ளன; திருக்கேதீச்சரத் திருக்கோயில் திருமட மென்னு மிவைகளின் நிர்வாக விஷயமாக, முந்தி எமக்குப் புலப்படாச் சில காரியங்களை, திரு. சிவசுப்பிரமணியம் தமது இக் கடித வாயிலாக எடுத்துப் புலப்படுத்தியுள்ளார்; அதன்பொருட்டு அன்னார் மீது நாம் பெருநன்றி பாராட்டுகின்றேம்.

திருக்கேதீச்சரத் திருப்பணி விஷயமாகச் சைவமக்க ளெல்லாரும் ஒத்துழைக்க வேண்டியது இம் மக்களைப் பொறுத்த கடனாகும். இப் புராதன புண்ணிய க்ஷேத்திரத்தைப் புனருத்தாரணம செய்து வைக்கும்படி திருப்பணிச் சபையார் கொண்டுள்ள ஆர்வமும் முயற்சியும் அதிகமாகும்; அவற்றிற்கேற்ப இந்நாட்டிலும் ஏனைய நாடுகளிலுமுள்ள சைவமக்களனைவரும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்தாற்ருன், இத்தலத் திருப்பணி விரைவில் நிறைவேறி, இதன் நித்திய நைமித்திகங்களும் இனிது நடைபெறுதல் இயலும். ஆனல் இத்திருப்பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையே என்பது சைவமக்களுட் பலருக்குக் கவலையைத் தருகின்றது.

இத் திருப்பணி வேலையைக் காலதாமசமின்றிச் செய்தற்கு இடையூறுகவுள்ளன இரு ஏதுக்களென்று மேற்படி கௌரவ காரியதரிசி தெரிவித்துள்ளார்; அவற்றுளொன்று, குறித்த திருப்பணியைத் தொடங்குமுன் ஒரு லட்சம் ரூபாவைச் சேர்த்துப் பண "வங்கி"ல் இடவேண்டுமென்பது; ஒரு லட்சம் ரூபாவைச் சேர்த்துப் பணவங்கிலிட்டுக்கொண்டு திருப்பணியைத் தொடங்குவது உத்தமமென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனல் வறுமையோடு கூடியதாகிய எங்கள் நாட்டிலே ஒரு லட்சம் ரூபாவை முன்னதாகச் சேர்த்துக்கொண்டு, பின்னதாகத் திருப்பணி செய்ய உத்தேசித்தல் சாத்தியமானதோ என்பது சிந்தித்தற்குரியது; பெருந்தொகைப் பணத்தை முந்திச் சேர்த்துக்கொண்டு பிந்தித் தொடங்கி நிறைவேற்றப்பட்ட பொது ஸ்தாபனம், சமயதாபனம் ஏதும் இற்றை வரையில், இலங்கையிலே தமிழர் வாழும் நாட்டில் உண்டோ என்பது சந்தேகம்; ஆனல் திருப்பணிச் சபையார் ஒரு பெருந்தொகைப் பணத்தைச் சேர்த்துத் திரட்டிப் பணவங்கில் இட்டபின்புதான் திருப்பணியிற் கையிட வேண்டுமென்று யோசித்தற்கு அந்த ரங்க நியாயமும் ஒன்றுண்டென அயிர்க்கக் கிடக்கிறது; இத் திருப்பணியை விரைவில் ஆரம்பித்தற்காகிய முறையை நாம் பணிவுடன் சொன்னல் எம்மை எவரும் விபரீதமாக நினைக்க மாட்டார்களென்று நம்பியே சில எடுத்துக்காட்டத் துணிந்தேம்.

இத்திருப்பணி ஆரம்பித்து நடைபெறும்போது தங்களால் இயன்ற தொகையையொருங்கோ, இல்லையேற் காலந்தோறுமோ கொடுக்கலாகும் என்ற நோக்கத்தோடு எங்கள் நாட்டிற் சில அபிமானிகள் இருக்கிருர்கள். மேலும், திருப்பணி தொடங்கி நடந்தாற்ருன் அபிமானிகளுக்கு நம்பிக்கை பிறக்க, அவர்கள் பொருளுதவுவார்கள்; இது இந் நாட்டிலுள்ள மக்களின் இயல்பாகும்; ஆனதால், திருக்கோயிலுக்காகிய தானத்தை வகுத்துக் கொண்டு, அமைக்கும் முறையைக் குறிக்கும் படத்தையும் அமைத்துக் கொண்டு, வாலஸ்தாபனம், அத்திபாரமிடுதல் முதலிய கருமங்களுக்குத்தவணையிட்டுவிட்டு, அத்திபாரமிடுதற்கு மேற்பட்ட கோயிற்கட்டடப் பணிக்காகிய மண்டபங்கள் முதலியவற்றிற்குரிய கருங்கல் வேலையை இப்பொழுதே சிற்பிகளைக்கொண்டு செய்விக்கத் தொடங்கலாகும்; இப்படியே நிலைக்குரிய கற்கள், மேல்வேலைக்குரிய கற்கள், கோயிலமைப்பிற்குரிய வரிகள் முதலானவற்றையெல்லாம் செய்து அடுக்கி வரும்போது, அபிமானிகளாயுள்ளாரும் திருப்பணி துரிதமாக நடைபெறுவதைக்கண்டு பணமுதவுதல் இயல்பாகும்; இந்தமுறையிலே திருப்பணி தொடங்கி நடைபெறுமானல்; எம் பெருமானருளால் இலட்சக்கணக்கான பணம் விரைவில் வந்துசேரும்; இவ்வாறு வேலை செய்து அது பூரணமானபின்பே பாலஸ்தாபனஞ் செய்து அத்திபாரமிட்டுத் திருப்பணி தொடங்கி விரைவிற் பூர்த்தியான திருக்கோயிலொன்றை, இதனையெழுதும் நாம் நேரில் அறிவேம்; குடி தண்ணீர் விஷயத்திலும் திருப்பணியைத் தொடங்கியவுடன் குடிதண்ணீர் ஒழுங்குகளையுஞ் செய்தலாகும்; மேலுங் குடிதண்ணீர்ச் சௌகரியங்கள் குறித்த தலத்தில் இப்பொழுது திருந்திவருகின்றன என அறியலானேம்.

அன்றியும் "திரையவித்து நீராடலாகா" என்றவாறு, இப்படியான சௌகரியக்குறைவுகளையெல்லாம் நிவிர்த்தி செய்துகொண்டுதான் கருமாரம்பஞ் செய்யவேண்டுமென நாம் நம்பியிருக்கவொண்ணது; கேதீச்சரத்தெம்பெருமான் திருவருளை முன்னிட்டுக் கொண்டு நாம் திருப்பணியைத் தொடங்குவதே புத்தியாகும்; எங்கள் காயம் அநித்தியம்;

"காலைச் செய்வோமென்
றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச் செய்வாரே
தலைப்படுவர் — மாலை
கிடந்தான் எழுதல் அரிதால்
மற்றென் கொல்
அறங்காலை செய்யாத வாறு"

என்ற இந்தச் சிந்தனை எங்களிடத்தில் எப்போது மிருத்தல் வேண்டும்; இக்காலத்துள்ளார் தொடங்கிவிட்டால், இறைவனருளாற் காலகதியிலேனும் இத் திருப்பணி நிறைவேறும்; இன்னும இப்பெரிய திருப்பணிக்கு இற்றைவரையிற் சேர்ந்துள்ள பணம், அதில் ஏதுஞ் செலவு நேர்ந்தால் அச் செலவின் தொகை முதலிய விபரங்கள் ஒருமுறையேனும் இதுபோன்ற பத்திரிகையில் வெளியிடப்படின், அபிமானிகளுள்ளத்தில் நம்பிக்கையும் ஊக்கமும் பிறக்குமென எண்ணுகின்றேம். தூய சிந்தனையுடன் இவற்றையெழுதினேம்; ஏதும் பிழையிருந்தால் எல்லாம் வல்ல இறைவன் பொறுத்தருள்க.

### பாகிஸ்தான் பண "வங்கு"

இந்திய பண "வங்கு" அதிகாரிகளும், பாகிஸ்தான பணவங்கு அதிகாரிகளும், தாங்கள் இலங்கையிலும் பணவங்குகள் திறக்கவேண்டுமென இலங்கை அரசினரைக் கேட்டவிடத்து, இலங்கையரசினர் அதற்குச் சம்மதந் தெரிவித்தனராம்; ஆனல் இலங்கை மாநிய வங்குப் பண விஷய சங்கத்தார் அதற்கு உடன்படுகின்றிலராம், ஆனலும் பாகிஸ்தானிலுள்ள ஹபில் வங்கின் பிரதிநிதி இங்கும் ஒரு வங்கு திறப்பதற்கு உத்தேசங் கொண்டு இப்பொழுது கொழும்பில் வந்து நிற்கின்ருராம.

### இராமேஸ்வரர் மஹோத்ஸவம்

27 - 7 - 51 — 12 - 8 - 51 முடிய ஷெ ஆலயத்தில் இவ்வருஷ ஆடித்திருக்கல்யாண உற்சவம் வழக்கம்போல் மஹோற்சவம் நடைபெறும். (2 - 8 - 51) ஆடி அமாவாசைத் தினத்தன்று (தனுஸ்கோடி) சேதுக் கரையில தீர்த்தவாரியும் அன்றிரவு நீப அலங்காரத்துடன் வெள்ளிரத உற்சவமும், (4 - 8 - 51) ரதோத்ஸவமும் நடைபெறும. பின் 6-8-51 முதல் 12-8-51 வரை திருக்கல்யாண வைபவமும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

—கடிதம்.

### சுகாதார வாரக் கொண்டாட்டம் 1951

"இன்று எங்கள் சுகாதார பரிசோதகர்களைப் பற்றிக் கூறுவோம். சுகாதார இலாகாவின் முதுகெலும்பு அவர்களே. ஆகையால் சுகாதார சுவிசேஷத்தைப் போதிக்கும் நற்போதகர்களின் இடத்தில் அவர்கள் இருக்கின்றனர். முந்திய தலைமுறையின் சுகாதாரப் 'பொலிஸ் மாராக' அவர்கள் இனி இருக்கவில்லை. தம கடமையைச் சரிவரச் செய்வதாயிருந்தால் அவர்கள் தாம் சேவை செய்யும் சனங்களுக்கு இச் சுகாதாரத் துறையில் வழிகாட்டிகளாய் இருத்தல் வேண்டும். விரும்பிய இப்பலனைப் பெறச் சுகாதாரக் கல்வியிலும் வேண்டிய பிற பயிற்சிகளிலும தேறிய சிறந்த ஆட்களே வேண்டும். அமெரிக்க ஐக்கியநாடுகளில் சுகாதார இலாகாக்கள் தம உத்தியோகஸ்தர்களிடையே சுகாதாரக் கல்வியாளர்களைப் பயிற்றுவித்து, சுகாதாரக் கல்வித் திட்டங்களை அவர்களைக்கொண்டு உண்டாக்குகின்றன. சுகாதார உத்தியோகஸ்தர்கள் பயிற்சியில் சுகாதாரக் கல்விக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏனெனில், சுகாதாரக் கல்வியாளர் இன்மையால் சமூகம் இவர்களையே சுகாதார விஷயங்களை எல்லாவற்றிலும வழிகாட்டிகளாக நம்பியிருக்கின்றது. தேகாரோக்கிய முள்ள சமூகம் அமைக்கும் திட்டம் சிறப்புறவேண்டுமானல், விஞ்ஞான முறையிலும நல்வழிகளிலும வழிகாட்டத்தக்க சுகாதார உத்தியோகஸ்தர்கள் இன்றியமையாதவர்கள்."

— சுகாதாரவார வெளியீடு

### பட்டினத்தடிகள் குருபூசை

சென்ற திங்கட்கிழமை 25-7-51 இரவு 6½ மணி தொடக்கம் 9 மணி வரை, பட்டினத்தடிகள் குருபூசை யாழ்ப்பாணஞ்சைவபரிபாலன சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் நடத்தப்பெற்றது. கடவுள்வாழ்த்துடன் நிகழ்ச்சியின் பிரம்மஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவர ஐயர் தலைமையில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. தலைவர் பட்டினத்தடிகள் திருப்பாடலிற் சிலவற்றைப் பாராயணஞ் செய்தனர். அதன்மேல் திரு. பொ. அப்புக்குட்டியார் "பட்டினத்தடிகள்" என்னும் பொருள்பற்றிச் சிறந்த பிரசங்கஞ் செய்தனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

### அறிக்கைக்கு மறுப்பு

20 - 7 - 51 ல் அன்று சரவணை புளியங்கூடல் கதிர்வேலாயுதசுவாமி கோவில் மண்டபத்தில் நிகழ்ந்த சைவப் பிரசங்கக் கூட்டத்தில் கீழ் வரும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

(அ) இந்து ஆலய விசாரணைச் சபையாரின் அறிக்கை பன்னிரு திருமுறைகளையும் 14 சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றுக்கு முரணாகத வேதாகமங்களையுமே சைவசமய முதல் நூல்களாகக் கூறுகின்றது. இக்கருத்துத் தவறுகும். தொன்மையாகச் சைவசமய முதல் நூல்களாகக் கொள்ளப்பட்டவை வேதசிவாகமங்களேயாகும். இவ்விதவிபரீத கருத்துக்கள் பல குறித்த அறிக்கையில் அடங்கியிருப்பதால் அவ்வறிக்கையை இச்சபை ஏற்றுக்கொள்ளவில்லை.

(ஆ) சைவசமய ஆலயங்களின் சொத்துக்கள் அரசினர் பாதுகாக்க முயன்றால் ஆலயங்களை வியாபாரஸ்தலங்களாய் விடாமலும் பக்தி குறைந்துவிடாமலும் அவ்வாறு செய்தலையும் இச்சபை கண்டிக்கின்றது.

பிரேரித்தவர்: திரு. வே. சோமசுந்தரம்; அநுமோதித்தவர்: திரு. வே. பொன்னம்பலம்.

—கடிதம்.

கடிதம்.

# திருக்கேதீச்சரத் திருப்பணி

ஐயா,

திருக்கேதீச்சரம் என்னும் தலைப்புடன் தங்கள் மதிக்கற்குரிய பத்திரிகையில், தாங்கள் இம் மாதம் 6-ம் திகதி (6-7-51) எழுதிய ஆசிரியக் கட்டுரையைப் படித்தோம். அத்துடன் "நடராஜமூர்த்திப் பிரதிஷ்டை" என்னுந் தலைப்புடன் எழுதிய குறிப்புரையையும் படித்து மகிழ்ந்தோம். சைவமக்களுக்கு மிகவும் புனிதமானதாகஇருக்கும் பாடல்பெற்ற சிவதலமாகிய திருக்கேதீச்சரத்தைப்பற்றியும் இவ்வாலயத் திருப்பணிச் சபையார் தொண்டைப்பற்றியும் தாங்களும் தங்கள் பத்திரிகையும் இடையிடையே எழுதிவரும் குறிப்புக்களும் விளம்பரங்களும் சைவமக்களாகிய எங்களுக்கு மகிழ்ச்சியும் உளக்கிளர்ச்சியும் ஊட்டுவன.

இத் திருக்கோயில் கட்டப்பட்டிருக்கும் காணியை விலைக்கு வாங்கும் காலத்திலும், கோயிலைக் கட்டுங் காலத்திலும் இந்துசாதனத்திற் பிரசுரிக்கப்பட்ட குறிப்புக்களும் ஆசிரிய கட்டுரைகளும் அக்காலத்துச் சைவ மக்களுக்குப் பெரிய ஆர்வத்தைக் கொடுத்ததோடு அறியக்குரிய பல அரிய விஷயங்களையும் அளித்தன. அக்காலத்தில் வெளிப்படுத்திய அரிய பொருளெல்லாம் புனருத்தாரணஞ்செய்யும் இக்காலத்திலும் மீண்டுமொருமுறை விளக்கப்படுத்தி வெளிப்படுத்துவீர்களாயின், இக்காலத்துச் சைவமக்களுக்கும். திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபையாருக்கும் ஊழ்ச்சியைத்தந்து இவர் தமமைச் சிவப்பணியில் உறைத்து நிற்கச் செய்யும் பெருந்தொண்டைச் செய்தவர்களாவீர்கள்.

ஆசிரியக் கட்டுரையில் தாங்கள் கூறியபடி அக்காலத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் திருக்கேதீச்சர ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டியது மிக அவசியமென்றும், சைவமக்களுக்கு அது ஒரு 'தேன் பொந்து' போன்றதென்றும் இடித்துரைத்தார்கள்.

சைவ மக்களுக்கும், சைவத்தாபனங்களுக்கும் தமகாலத்தில் பெருந்தொண்டு செய்துவந்த சைவத் திருவாளர் பசுபதிச்செட்டியார்திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண விஷயத்திலும் பெரு முயற்சிபூண்டார். சைவபரிபாலன சபையாரும் சைவசாத்திர அறிஞராகிய திருவாளர் சு. சிவபாதசுந்தரமும் பல்லாண்டாக இத்திருத்தலத்தைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமென்று தூண்டிக் கொண்டிருந்தனர்.

சைவ சமயத்தை வளர்த்தலிலும், திருப்பணி வேலைகளைச் செய்வதிலும், சென்ற இடமெல்லாம் கோவில் கண்டு திருவிழா நிகழ்த்துவதிலும் மிகவும் பற்றுள்ள நகரத்தார் (செட்டிப்பிள்ளைகள்) திருக்கேதீச்சர புனருத்தாரண விஷயத்திலும், அக்காலத்தில் தக்க சிரத்தை கொண்டுபெருமுயற்சிசெய்து, திருக்கேதீச்சர ஆலயம் முன்னர் இருந்த காணியை விலைக்கு வாங்கி இப்பொழுதுள்ள ஆலயத்தைத் தாபித்தார்கள். இக்காலத்தில கொழும்பிலிருக்கும் பழைய கதிரேசன்கோயில், புதுக்கதிரேசன்கோயில் ஆகிய இரு தேவஸ்தானங்களுமே திருக்கேதீச்சர ஆலயத்தைப் பரிபாலனஞ்செய்து வருகின்றன.

திருக்கேதீச்சர ஆலயத்தைக் கொழும்பிலுள்ள இரு கதிரேசன் கோவில்களும் எவ்விதம் பரிபாலனஞ் செய்துவருகின்றனவோ, அவ்விதமே திருக்கேதீச்சர ஆலயத்தின் அண்மையில் புதிதாக அமைக்கப்பெற்ற திருஞானசம்பந்தர் மடாலயத்தைத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையார் பரிபாலனஞ் செய்து வருகிறார்கள். இம்மடத்தை அமைத்தவரும் இச்சபையாரே.

தாங்கள் குறிப்பிட்ட வேலணைத் திருவாளர் செல்லப்பர் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் ஒரு அங்கத்தவர். சபையார் மடம் அமைத்தற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து அதற்காக வேண்டிய பணத்தை உதவினர். மேலும் மடத்தின் அமைப்புக்குஆகவென்று விரும்பிப் பணம் பொருள் முதலியன கொடுப்பவர்களிடம் சபையின் பேரால் பெற்றுமடத்துக்கு ஆவனவற்றைச் செய்து வருங் கடமை இவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; திருவாளர். செல்லப்பா ஒரு அங்கத்தவரெனும் உரிமையுடன், சபையின் வேலை அலுவல்களை மற்றும் அங்கத்தவர்கள் பார்த்து வருவதுபோல, மட அமைப்பின் மேற்பார்வையைச் செய்து வந்திருக்கின்றனர்.

மடத்தை அமைத்தல், அதைப் பரிபாலித்தலாகிய சகல பொறுப்புக்களையும் சபையாரேகொண்டுநடத்தி வருகின்றனர். மடத்தின் பரிபாலனம் முழுவதும் சபையாருடைய பொறுப்பிலேயே இருக்கிறது. மடத்தில் இருக்கிறவர்களுடைய செலவுகளுக்கும், யாத்திரிகர்களுடைய உணவுச் செலவுகளுக்கும் மற்றைய எல்லாச் செலவுகளுக்கும் சபையாரே அப்போதைக்கப்போது பணம் அனுப்பி வருகிறார்கள். மடத்திலுள்ள உண்டியல் பணமும் இவற்றுக்கே பயன்படுத்தப்பெற்று வருகிறது.

திருக்கேதீச்சர தலத்தைப் புனருத்தாரணஞ் செய்வதோடு, சைவ சமயம் பரவுவதற்கு ஆவன செய்வதும் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் முக்கியமான நோக்கங்களுள் ஒன்றாகும்.

திருப்பணி வேலையைத் தாமதமின்றித் தொடங்கி நடத்தவேண்டும் எனத் தாங்கள் குறிப்பிட்டவைகளைக் கவனித்துக் கொண்டோம். வியாழக்கிழமை (5 - 7 - 51) பன்றுகூடிய திருவாகசபைக் கூட்டத்தில், திருப்பணித்திட்டப்படங்கள் சமர்ப்பிக்கப்பெற்று ஏகமனசாய் ஒப்புக்கொள்ளப்பெற்றிருக்கின்றன; திருப்பணி வேலையைத் தொடங்குமுன், ஒருலட்ச ரூபாய்க்குக் குறையாமல் சேர்த்து வங்கியில் வைத்துக்கொள்ள வேண்டுமெனவே சபையார் தீர்மானித்திருக்கிறார்கள். அல்லாமலும், திருப்பணிவேலை தொடங்குமுன் போதிய குடி தண்ணீர் அங்கு எடுப்பதற்கேற்ற ஒழுங்குகள் செய்துகொள்ளுதல் இன்றியமையாததாயிருக்கிறது.

விரைவில் திருப்பணிவேலை தொடங்குவதற்கு, விரைவில ஒரு லட்ச ரூபாய் சேகரிக்க வேண்டியிருக்கிறது. தாங்களும் தங்கள் பத்திரிகையும் இத்தத் தொகையைச் சேர்ப்பதற்கு உதவிபுரியுமாறு வேண்டுகிறோம்.

சு. சிவசுப்பிரமணியம்

156, ஹல்ஸ்டோர்ப்
கொழும்பு
22-7-51.

# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

## உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (29-7-51—4-8-51)

**மேடராசி** அச்சவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தில் நண்பர்களால் உதவியுண்டு. அரித்த உறவினர்களிடையே வாக்குவாதம் பிணக்கு நேரக்கூடும். முயற்சியால் நினைத்தகாரியம் கைகூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்.

பண வருவாயுள்ள கிழமை; சனசமூகங்களிற் சித்தியுண்டு; குடும்ப ஒற்றுமையுமுண்டு. விவாகஞ் செய்யாதவர்க்கு விவாகப்பேச்சு உண்டாம்; எடுத்த முயற்சியை ஊக்கத்துடன் செய்க.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இவ்வாரத்திற் சில நிலையான நன்மைகளுண்டு. தூரதேசத்தி லிருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். ஆண்களுக்குப் பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் உதவியுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

இவ்வாரத்தில் அபவாதம் கேட்க நேரிடும்; புது முயற்சிகளால் பலனுண்டாகும்; பிறருடைய கருமங்களிலே தலையிடவேண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம பாதம்.

மனச்சஞ்சலம் தரும் வாரம்; உத்தியோகத்திற் பிணக்கும் குடும்பப் பிணக்கும் நேரக்கூடும்; கிழமை முடிவிலே சில நண்பர்களாற் பெரும் உதவியுண்டாகும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

சங்கடம் சேர்ந்த பின் நன்மையுண்டாம்; ஏமாற்றப் பார்ப்பவர்கள் விஷயத்திற் கவனமாயிருக்கவேண்டும்; இடையாய்த் தன்று கைவிட்ட பணம் இவ்வாரத்தில் மீண்டு வரக்கூடும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

கிழமையின் முதலிரு நாளிலும் சாவதானமாக நடந்துகொள்க; அற்ப இடையூறு, உத்தியோக ஸ்தானத்திற் பிணக்கு, பொருள் இழவு முதலியன நேரக்கூடும்; எஞ்சியநாட்களிற் பொருள் வருவாயுண்டு; ஆனால் மன ஆறுதலில்லை.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் புதன்கிழமை முடியக் காரியப் பிரதிகூலமுண்டு; ஏனைய நாட்கள் நன்மைக்கானவை; புதிய கருமங்களிற் சித்தியும் புகழுமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

கிழமையின் முற்பகுதி சோர்வோடு கூடியது; நினைத்த காரியங்கள் கைகூடா; வியாழன் தொடக்கம் சனிக்கிழமை முடிய பணத்தை அவதானமாகச் செலவிடுக; உத்தியோகத்திலே பிணக்கு வராமல் நடந்துகொள்க.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

மனைவி மூலமாகச் சஞ்சலமுண்டு; பெரியோரையும் பகைக்க நேரும்; சில காலத்திற்குக் கோபத்தை அடக்கிப் பணிவாக நடந்துகொள்க.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3 ம் பாதம்

சில புதிய அனுகூலமுண்டு; பார்க்கும் கருமத்திலும் சில மாறுதலுண்டாம். குடும்பச்சகாடம் அற்பமாக நேரக்கூடும்; ஆனால் பொதுவில் நன்மையான கிழமை.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

அலுவல்களின் பொருட்டுப் பணச் செலவு அதிகப்படும்; சுகத்தைப் பேணுக; அநாவசிய வேலை செய்வதையும் கவலைப்படுவதையும் தவிர்த்து விடுக; உத்தியோக ஸ்தானத்திலும் பிணக்கு நேரக்கூடும்.

# ரேடியோ

## இசைத்தட்டு

**திருச்சி சனி ஜூலை 28**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் வி பக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 சிகைக்கேட்டவை * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஆங்கிலத்தில்பேச்சு 2 தமிழில்செய்தி 2 10 ஆங்கிலத்தி பேச்சு 2 25 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 ஜலதரங்கம் ஆ. இ ரே. வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 பி எஸ் வேதாசலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்சொல்கேளீர் 9 30 ரவீந்த்ர சங்கீத ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு ஜூலை 29**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம் * 12 30 சூர்யகாந்தி கதம்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 பங்கஜ்மல்லிக் * 2 தமிழில்செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 ஆர் ஷண்முகசுந்தரம் பிள்ளை வீணை 5 45 டி கே வல்லபை பாட்டு 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 சிகைக்கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சினிமாபாட்டுகள் * 7 45 வாழ்விலேதோய்த்தகலை 8 மாயூரம் எஸ் ராஜமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆர் ஷண்முகசுந்தரம்பிள்ளை வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் ஜூலை 30**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள்கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே ஆர் கணபதி புல்லாங்குழல்* 2 தமிழில் செய்தி 2 10 ஜெமினி வாத்யகோஷ்டி* 2 15 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சி வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சினிமாபாட்டுகள்* 7 45 ரேடியோஅறிமுகம் 8 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் 8 30 குடாமணி * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் ஜூலை 31**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே வி [illegible] பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 இருகுரலிசை 2 தமிழில்செய்தி 2 10 என் ராம் [illegible] கிளாரிநெட்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 புல்லாங்குழல், வித்வார் ஆ இ ரே வித்வான்கள் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 பாலம் ராமமூர்த்திபாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 திருவிடமருதூர் பி எஸ் வீருசாமிபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 பாலம் ராமமூர்த்தி பாட்டு 10 முடிவு.

# நாம் ஏன் பிறந்தோம்?

1-ம் பக்கத் தொடர்ச்சி

கிறது. இன்பத்திலும் வெறுப்பு உண்டாகிறதென்பது ஆச்சரியமாக இருக்கலாம். ஆண்டி முதல் அரசன் ஈறாக எல்லோருக்கும் ஆசையற்றுப்போவதில்லை. ஆசை எப்பொழுதும வளர்ந்து கொண்டு போகும் இயல்பினை யுடையது. ஆகவே இவர்கள் தமக்குக் கிடைத்த இன்பம் அனுபவித்து ஒழிய ஆசையால் இழுக்கப்பட்டுத் திரும்பவும் அவ்வின்பத்தை அனுபவிக்க விரும்புவர். அவ்வின்பம் தாம் அனுபவித்த இன்பம் கிடைக்கப் பெருவிடத்து இவர்களுக்குத் தாம் அனுபவித்த இன்பமே துன்பமாக முடிகிறது.

இவ்வண்ணம் இன்ப துன்பங்களில் வெறுப்பு அடைந்த ஆன்மா இவற்றிற்குக் காரணமாகிய நல்வினையும் வேண்டாம் தீவினையும் வேண்டாம், இவை இரண்டும் இரும்பு விலங்கும், பொன் விலங்கும் போன்றன என்று எண்ணி இரண்டு வினைகளையும் ஒப்ப நோக்குகின்றது. இது இருவினையொப்பு எனப்படும் ஆன்மாவுக்கு இருவினையொப்பு நிலையுண்டாக அது எதனையும் தன்செயலாக மதியாது எல்லாம் சிவன்செயலென மதிக்கிறது.

இப்பொழுது நான், எனது என்னும் அகங்கார மமகாரம் என்று சொல்லப்படும் ஆணவமலம் வலி குறைகின்றது. ஆணவம் வலி குறைந்து நிற்கும் நிலை மலபரிபாகம் எனப்படும். [மலம — ஆணவம். பரிபாகம்—கெடுதல்]

ஆன்மாவை இதுவரை மயக்கி வருத்தி வந்த ஆணவம் வலிகெட ஆன்மாவின் ஞானக்கண் திறபடுகின்றது. அப்பொழுது ஆன்மா தனக்கு அப்பால் ஒரு சக்தி வாய்ந்த வஸ்து இருக்கின்றதென்பதை கம்பாத ஆன்மா—தனக்கு அப்பால் ஒரு வஸ்து இருப்பதைக் காண்கிறது. இதுவரையும் ஆன்மாவைக் கொண்டு கன்மங்களைப் புசிப்பித்த மலசக்தி, இப்பொழுது திருவருட் சக்தியாக மாறுகின்றது. இத் திருவருட் சக்தியே ஆன்மாவின் ஞானக் கண்ணைத் திறந்து அதற்குச் சிவத்தைக் காட்டுகின்றது. இதனையே சத்திநிபாதம் என்று சொல்வார்கள். [சத்தி — திருவருட் சக்தி. நிபாதம்=பதிகிறது] ஆதாவது ஆன்மாவின் திருவருட்சக்தி பதிதல் ஆகும்.

இப்பொழுது ஆன்மா தான் கண்ட புதுப்பொருளை—சிவத்தையடைய முயற்சிக்கின்றது. திருவருட்சக்தி இதற்குத் துணைபுரிய ஆன்மா சிவத்தை அடைகிறது. இதனாலேயே "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி" என்று திருவருட் சக்தியை உமாபதிசிவம் சிறப்பித்துக் காட்டியுள்ளார். தன்னிலைமை யென்பது சிவத்தோடு இரண்டறக் கலந்து நிற்கும் பேரின்பமாகிய முத்திநிலையாகும். இந்நிலையையே நாம் அடையவேண்டும். இதனை அடைய முயற்சிப்பதே நாம் பிறந்ததின் நோக்கமாக இருக்கவேண்டும். இதற்கிணங்கவே நாம் எமது அடிப்படையான இலட்சியத்தையும் அமைக்க வேண்டும்.

கன்மங்களை அனுபவித்தற்காகவே ஆன்மா பிறக்கின்றது என்றும் அதனால் நன்மை அடைகின்றதென்றும் கூறியுள்ளோன். கன்மங்களை அனுபவிப்பதனால் ஆன்மா நன்மையடைகின்றதெனினும் கன்மங்களை அனுபவிக்குங் காலங்களில் புதுக் கர்மங்களையும் செய்து விடுகின்றது, இது மீண்டும் பிறவிக்குக் காரணமாகின்றது. எம் அறியாமை காரணமாகவே பிறவிக்குக் காரணமாகிய வினைகளை நாம் செய்கின்றோம். இவ்வறியாமை வலையை அறுக்க வல்லது பகுத்தறிவென்னும் மிகுத்தறிவாகும். இது உயர்திணைப் பிறவிகளுக்குச் சிறப்பாக இறைவனால் அருளப்பட்ட நன்கொடையாகும்; மனிதன் பகுத்தறிவுடையவன். இதனால் இவனுக்குச் செய்யத்தக்கது என்ன, செய்யத் தகாதது என்ன என்பதை அறியும் சக்தி—உண்மையை உணரும் சக்தி—உண்மையைநாடுஞ்சக்தி உண்டு. ஆனால் விலங்குபோன்ற ஐயறிவுடைய உயிர்களுக்கு இப்பகுத்தறிவு இல்லை. இதனால் இவைகளுக்கு நன்மை தீமை; புண்ணியம பாவம்; தகுவன தகாதன எல்லாம் ஒன்றாகவே தோற்றம். எனவே இவை உண்மையை உணரமாட்டா. அதனால் கடைத்தேறும் வழியையும் அறியமாட்டா. தேவர்களுக்கும் இந்த மிகுத்தறிவு உண்டு. ஆனால் இவர்கள் முன்பு செய்த பசு நல்வினை வசத்தால் இன்பத்தை அதிகமாக நுகருவார்கள், கடும் வெயிலில் அலைந்த ஒருவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். அவனை யாரும் தூண்டாமலே நிழலை வந்து அடைவான். வெயிலை அறியாத ஒருவனுக்கு நிழலின் அருமை தெரியாது. இவ் வுண்மையை,

"தானிழலார்தற்குயாரும்சொல்லார்
தொகுமிதுபோற்
றூனதுவாய் நிற்குந் தாம்."

என்னும் உமாபதி சிவத்திருமொழியால் அறியலாகும். இது போலத் தேவர்களும் அளவிறந்த இன்பநுகர்ச்சியின் தன்மையால் தங்களுக் குண்டாகப்போகும் பிறவிப் பிணியை நீக்கும் மருந்தாகிய திருவருளை நாடமாட்டார்கள். கரும்பினுள்ள சாறு எடுக்கப்பட்டபின் சக்கை தள்ளப்படுவதுபோன்று இவர்களிடம் உள்ள புண்ணியப் பொருள் முற்றும் நுகரப்பட பாவப்பொருள் எஞ்சியிருக்கின்றது. இதனால் இவர்களும் பாவத்தை அனுபவிப்பதற்குத் தாழ்ந்த பிறவிக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். இவ்வுண்மை, "வானிலும் தேவர்க்கரியாய் போற்றி" என்ற தொடரால் அறியக்கிடக்கின்றது. ஆகவே ஆன்மாவை அழுத்தும் பிறவிப்பிணியை நீக்குதற்குச் சிறந்த பிறவி மானுடப் பிறவியாகும். இதனாலேயே எமது ஔவை மூதாட்டியாரும் "அரிது அரிது மானுடராதல்" என்று மானுடப் பிறவியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

## குற்றங்கள் விருத்திக்குக் காரணம்

இலங்கைப் பொலிஸ் தலைவர் வெளியிட்ட அறிக்கைப்பத்திரத்தில் இந் நாட்டிலே சென்ற ஆண்டில் நேர்ந்த பெருங் குற்றங்கள் 5733 ஆகுமாம்; இவற்றுட் பெண்ணாசை காரணமாக நேர்ந்த குற்றங்கள் 339. சடுதியிலெழுந்த கோபங் காரணமாக நேர்ந்த குற்றங்கள் 1949; காணியுரிமை காரணமாக நேர்ந்த குற்றங்கள் 847; பழைய வைரஞ் சாதித்துச் செய்யப்பட்ட குற்றங்கள் 850; குடிவெறி காரணமாக நேர்ந்த குற்றங்கள் 792. இலங்கை முழுவதிலும் நேர்ந்த நரக் கொலையின் தொகை 374; இவற்றுள் தென்மாகாணத்தில் மாத்திரம் நடந்த கொலையின் தொகை 81.

## ஆசிரியர் தேவை

வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் சிரேஷ்ட வகுப்புகளில் பெண் குழந்தைகள் மாத்திரமே கல்வி கற்கின்றார்கள். அவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தகுந்த ஆசிரியை 1—9—51 துவக்கம் தேவை. 15-8-51-க்குமுன் விண்ணப்பங்கள் கிடைத்தல் வேண்டும்.

காரைநகர்
23-7-51.

இ. நாகலிங்கம்
மனேஜர்

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

## திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2

புண்ணியநாச்சி மட தருமம்

நெல்வயல் குத்தகைக்கு

## விண்ணப்பப் பத்திரம்

மறவன்புலோ பகுதியில் புண்ணியனச்சி மட தருமத்திற்குரிய நெல் வயல்கள் குத்தகைக்குக் கொடுபட இருக்கின்றன. குத்தகையைப்பற்றிய விபரங்களை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜரிடம் நேரில் அறிந்து கொள்ளலாம்.

இந்த ஜுலாய் மாசம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கிடையில் மேற்படி விண்ணப்பப் பத்திரங்கள் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜரிடம் வந்துசேர வேண்டும்.

கா. சண்முகம்
காரியதரிசி
சைவபரிபாலன சபை.

யாழ்ப்பாணம்
17—7—51

M 56 17, 20, 24, 27—7—51.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம, 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்பாடும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday July 27, 1951